உ

சிவமயம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 NOV 1926
MADRAS



(முத்துப்பேட்டை

செம்படவன்காடு

அங்காளம்மன் கும்மி.)

இஃது

முத்துப்பேட்டை

மருதங்கா

பி. ம. க. மருதமுத்தம்ப

முத்துப்பேட

ஸ்ரீமான், ந. பொன்னுசாமி

ஸ்ரீமான், இராமச்சந்திர

பார்வையிட

மேற்படி கோவி

ா. வேலுத்

ஸ்ரீ மீனுட்

அச்சிட

அட். சயவு

Q25:417
N26
148621

உ

சிவமயம்.

முன்னுரை.

உலகத்தீரே !

இந்நூலைச் செய்தவர் பண்டைக் கர்லத் தமிழ்நாட்டு வீரர்களைத் தெய்வமாகக் கொண்டாடுவதில் தலை சிறந்தவர்.

இவர் இதற்குமுன் கனியாகுறிச்சி வடிவழகி அம்மையார் மீதும் நகரமென்னு சொல்லும் சேந்தங்குடி சமீன்றார் வகையினரைப்பற்றியும் பாடியிருக்கும் நூற்களைப் பார்த்தவர் இந்நூலை விரும்பாதிரார். இந்நூற் செய்தவர் “அவனே அவனே என்பதிலும் சிவனே சிவனே என சொல்லுதல்” மேலெனக் கொண்டவர்.

ஆகவே இந்நூலை எவரும் ஆதரிப்பார்களென்றே நம்புகின்றனம்.

முத்துப்பேட்டை,
29—4—26.

இங்ஙனம்,
கரந்தை T. S. முருகேசன்.

உ

சிவமயம்.

முத்துப்பேட்டை

செம்படவன்காடு

ஸ்ரீ அங்காளம்மை கும்மி.

கணபதி காப்பு.

பூமலியுஞ் செம்படவன் காட்டின்மேவு பொற்புருவங்காளம்மை யுமை
யாள்பேரில்
நாமலியுந் தமிழ்க்கும்மிப் பாட்டுரைக்க நறுங்கொன்றை புனை யீசன்
புதல்வனாகி
மாமலியு முயிர்கடோறு முருவதாகி மருவுமுயிர்க்கு யிராகிமன்னுசோதி
காமலியுங் கணேசனென் சருத்துணிற்கக் கருதுமவர் செம்மலர்த்தாள்
காப்பதாமே.

நூல்.

செம்படவன் காட்டி னங்காளம்மை பேரிற்
செந்தமிழ்க் கும்மி தனைப் பாட
தும்பிக்கை யானை முகத்தோனை நம்பித்
தொழுது கும்மி யடி மயில்காள் (1)

சத்திசிவன் பதம் தான்போற்றி யருள்
சற்குரு பாதம் மிகப் போற்றி
வெற்றி மயிலேறும் வேலவன் பாதத்தை
வேண்டிக் கும்மி யடி மயில்காள் (2)

செங்கமலத்தாய் பதம் போற்றித் திரு
வேங்கடந் திருத்தாள் போற்றி
எங்கும் புகழ்பெறும் அங்காளம்மை பதம்
இணங்கிக் கும்மி யடி மயில்காள் (3)

சதுர்முகப்பிர்மா பதம் போற்றி நாளும்
சரஸ்வதி திருத்தாள் போற்றி
சுருதியோதும் பெரியோர் பொற்பாதத்தை
தொழுது கும்மி யடி மயில்காள் (4)

அட்சய வருடம் வைகாசி மாதம்
ஆனதோர் பத்தாம் தேதி தன்னில்
விச்சித்திர மாகிய கும்பா பிஷேக
வேடிக்கை பார்க்கலாம் வாருங்கடி (5)

கும்மியடி பெண்காள் கும்மியடியுங்காள்
கூந்த லவிழ்ந்திடக் கும்மியடி
நன்மை பெருகவே அங்காளம்மை பாதம்
நாடிக் கும்மியடி மயில்காள் (6)

செம்படவன் காட்டில் மாணிக்க தேவரும்
செய்த தவப் பயனு லுதித்த
அன்புள்ள செல்வர்கள் ஐவர்களுங் கூடி
அங்காளம்மை கோவில் கட்டி வைத்தார் (7)

அங்காளம்மை கோவில் தானமைத்து அதில்
அலங்கார மண்டப மீதினிலே
மங்கையே பாரடி சித்திர வேலையை
வருணித் திருக்குது பெண்மயில்காள் (8)

வருணித் திருப்பதாய்ச் சொன்னீரையா யிந்த
வாகான கோயின் மதின் மேலே
சாணி சாணியாய்ப் பெண்க ளனேகமாய்
சார்ந் திருப்பதைச் சொல்லுமையா (9)

கன்னிமாப் பெண்க ளநேகமுண்டு கோவில்
காவல் காரர் அநேக முண்டு
சிம்மவாகன மீதேறி வெகு
சிப்பாய்கள் நிற்கிறார் பெண்மயில் காள் (10)

சிப்பாய்கள் நிற்பதாய்ச் சொன்னீரையா நல்ல
சிறந்த வேடிக்கை பார்த்தோமையா
அப்பாலே யொரு சித்திர மண்டபம்
அமைந் திருப்பதைச் சொல்லுமையா (11)

சித்திர மண்டபம் கட்டிவைத்து வேலுத்
தேவரெனும் பெயர் நாட்டி வைத்து
கர்ச்சித மாகவே காடேறி மண்டபம்
கட்டி யிருக்கிறார் பார் மயில்காள் (12)

கட்டி யிருப்பதாய்ச் சொன்னீரையா நல்ல
கெட்டியான வேலை பாருமையா யிந்தக்
கட்டிடத் துக் குள்ளிருக்குந் தெய்வங்களை
அட்டி யில்லாம லுரையு மையா (13)

அட்டி யில்லாமலுரைப் பேனடி பொல்லா
அடங்கா மதுரை வீரனுடன்
கட்டி வளர்க்கிற நாய்க்குட்டியு மிதோ
காவ லிருக்குது பார் மயில்காள் (14)

காவலிருப்பதாய்ச் சொன்னீரை யாகையில்
மான்மழு வேந்திய மாதவனும்
மேல்வீசை யோடுகதை யூன்றி விழி
சிவந்து நிற்பதைச் சொல்லுமையா (15)

ஈரிருகையுள்ள மகாதேவனை
இருளப்பசாமி இவர் தாண்டி
யாரொரு கும்மிடுதான் போட்டால் செய்த
பாவம் பறந்திடும் கண் மணியே (16)

காலி லொருவனைத் தான்மிதித்து இதோ
கையி லொருவனைத் தான் கிழித்து
கோல விழிகள் சிவப்பேறிக் கொடுஞ்
சூரியாய் நிற்பதைச் சொல்லுமையா (17)

வல்லாள ராசனைத் தான்மிதித்து அவன்
மைந்தனைக் கைதனிலே கிழித்து
உல்லாச மாகவே காடேறி வேஷமாய்
உமையவள் நிற்பதைப்பார் மயில்காள் (18)

பார்மயி லென்னு மொழிந்தீரையா அம்மன்
பக்கத்தில் நிற்கின்ற பாவையரின்
பேர் தெரியும்படி தானுரையும் பேச்சி
அம்மனைப் போலவே தோன்றுதையா (19)

பேச்சி அம்மன்தாண்டி பெண்மயிலே யதில்
பேதமொன் றில்லை என் கண்மணியே யிந்த
ஆச்சியைக் கண்டு வணங்கிடுவோம் பெண்ணே
அன்னமே தேனே பசுங்கிளியே (20)

பசுங்கிளி யென்றுமே தானுரைத்தீர் நல்ல
பாவாடை ராயனைப் போலொருவர்
புஜம் பொருந்திடும் மன்னவரா மொரு
புண்ணியர் நிற்பதைப் பாருமையா (21)

பாருமையா வென்று தானுரைத்தாய் பெண்ணே
பாவாடைராயன் தான் கண் மணியே
தேடக் கிடைக்காத அங்காளம்மை பாதம்
தேடித் தரிசிப்போம் வா மயிலே (22)

தரிசிப்போ மென்னுமே தானுரைத்தீர் அம்மன்
திருக் குளத்திற்கு முன்னாலே
தூண்டிக் காரனைத் தான்பார்த்து வேண்டி
தொழுது கும்பிடு போடுமையா (23)

சன்னதிக்குக் கொஞ்சந் தென்புறத்தில் சாமி
நொண்டி வீரனைத் தான் பார்த்து
கண்மணியே ஒருகும்பிடு போட்டு நங்
கமலை சன்னதி பார் மயிலே (24)

சன்னதி முன்னால் திருக்குளமா மங்கு
சாம்ப மூர்த்தி யிருப்பிட மாம்
நந்தி பொருந்து நந்தீஸ்வரர் பொற்பாதம்
நாடித் தரிசிப்போம் வாருமையா (25)

நாடித் தரிசிப்போமென்று சொன்னீர் நல்ல
நங்கை அங்காளம்மை பாதம்
துவார சக்திகள் போலிரு பெண்களுந்
தோணுது சொல்லவே வேணுமையா (26)

துவார சக்திகளிருவரடி பெண்ணே
தோகையே சொல்லுவேன் கேள்மயிலே
அகோர வீரபத்திர சாமியும்
அதோயிருக்கிறார் பார் மயிலே (27)

அதோ யிருப்பதைப் பார்த்தேனையா எங்கள்
அழகு கருப்பண சாமி ஐயா
கருப்பண சாமிக்குப் பக்கத்திலே பத்ர
காளி யிருப்பதாய்த் தோணுதையா (28)

எத்தலங்களிலுங் கீர்த்தி மிகப்பெற்ற
பத்ரகாளி மகமாயி நல்ல
உத்தமி நிற்கிறாள் பெண்மயிலே கொஞ்சம்
ஓதுங்கிவாடி யென் கண்மணியே (29)

கண்மணி யென்று மொழிந்தீரையா நல்ல
காசி மஹாராஜன் பெற்றெடுத்த
மதுரை வீரசாமியொடு பொம்மி
வெள்ளை அம்மயையும் பாருமையா (30)

தேடக் கிடைக்காத லாட சன்னாசியும்
தேவி மகமாயி பக்கத்திலே
தாடி வளர்த்துப் புலிமே லிருப்பதை
சந்தோ ஷமாகவே பாருங் கடி (31)

பொங்குங் கடல்சூழுலக மெல்லாம் புவி
ஈரேழு பதினாலு லோக மெல்லாம்
எங்கும் புகழ்பெறு மங்காளம்மை பாதம்
ஏற்றிப் போற்றித் தரிசிப்போம் வா (32)

தென்னை மாச்சோலைக் குள்ளிருக்கும் நல்ல
தேவி அங்காளம்மை தன்னருளால்
என்னமகிமை நடக்கு மென்று கொஞ்சம்
எடுத்துரைக்கவே வேணுமையா (33)

சங்குங் கரத்தில் மழுமானேந் திடும்
சாம்ப சிவனை மனதி லெண்ணி
அங்காளம்மை யாலே நடக்குங் காரணம்
அன்னமே சொல்லுவேன் பெண் மயிலே (34)

பெண் மயிலென்று மொழிந்தீரையா அம்மை
பிரபல்ய மானதைச் சொல்லுமையா
இம்மையி லெங்கள் வினைதீரக் கொஞ்சம்
எடுத்துரைக்கவே வேணுமையா (35)

வேணுமையா வென்று தானுரைத்தாய் பெண்ணே
விமரிசை யாகவே யிப்பொழுது
தோன்றும் படியாக நானுரைத்து இதோ
சொல்லுவேன் கேளடி பெண் மயிலே (36)

சொல்லுவேன் கேளடி பெண்மயிலே பொல்லா
சூலை பதினெட்டும் தீருமடி
நல்லோர் தொழுதிடு மங்காளம்மை பாதம்
நாடியே கும்மி யடி மயிலே (37)

நாடியே கும்மி யடியுமென்றீர் நல்ல
நாயகி அங்காளம்மை தன்னால்
சூலை பதினெட்டும் தீர்ந்திடு மாவினை
சொல்லாம லோடிப் பறந திடுமா (38)

சொல்லாமலோடி ஒழியுமடி நல்ல
தோகை யிளமயி லாரணங்கே
எல்லா வினையுந் தொலையுமடி யுனக்
கின்னமுஞ் சொல்லுவேன் கேள்மயிலே (39)

சொல்லுவேன் கேளடி பெண்மயிலே பொல்லா
சூதக வாய்வு பறக்குமடி
விள்ளுவேன் மேகநீர் வாதப் பிடிப்புடன்
வேளை வினைதீரும் பெண் மயிலே (40)

வேளை வினைதீரு மென்னுரைத் தீரையா
வேலண்டித் தரிசனஞ் செய் வோமையா
சாணரி தாகிய அங்காளம்மை பாதம்
கண்டு தரிசிப்போம் வாருமையா (41)

கண்டு தரிசிப்போம் பெண்மயிலே பொல்லா
கண்டமாலை யுடன் கன்னப்புற்றும்
அண்டத்திலோடி ஒளிக்குமடி யெங்கள்
ஆத்தா ளங்காளம்மை பேரைச் சொன்னால் (42)

அண்டத்திலோடி ஒளிக்குமென்றீர் நம்மின்
அங்காளம்மை பெயர் சொல்லுமுன்னம்
மண்டைக் குத்தோடு மயக்கம் பித்தவாதம்
வாந்தியும் போகுமா சொல்லுமையா (43)

மண்டைக் குத்தோடு மயக்கம் பித்தவாதம்
வாந்தி வயிர் வலி தீருமடி
தொண்டு புரியவே அங்காளம்மை பாதம்
சொல்லாம லோடிடும் பெண் மயிலே (44)

மயிலே குயிலே வனக்கிளியே இள
வஞ்சியே சொல்லுவேன் பெண்ணரசே
அகிலமெலாம் புகழ் அங்காளம்மையாலே
அண்ட வாயுந் தொலையுமடி (45)

அண்டவாயுவு தொலையு மென்றீர் நந்தம்
அங்காளம்மை பெயர் சொன்னவுடன்
மண்டைப் பருவுந் தொலைத்திடுமா மற்று
எந்த விஷமும் பறந்திடுமா (46)

மண்டைப் பருவும் மகோதரமும் சா
மண்டலி யென்ற பெரு விஷமும்
கண்டம் கருவழை கண்ணாடி விரியன்
காணாக்கடி விஷம் தீருமடி (47)

காணாக் கடிவிஷம் தீருமென்றீர் சேரும்
பூநாக மென்ற பெரு விஷமும்
பேய்நாய் விஷத்தோடு சகல விஷங்களும்
பெண் மயிலே தீரும் பார்மயிலே (48)

சகல விஷங்களும் தீருமென்றீர் பரா
சக்தி அங்காளம்மை தன்னருளால்
அகிலத் திலாடிடும் பேய்முழுதும் நல்ல
அங்காளம்மை அருள் ஓட்டிடு மாம் (49)

ஆடாத பேய்களும் ஆடிடுமே அம்மன்
பஞ்சாட்சரங் கொண்டு போட்ட வுடன்
ஓடாத பேய்களும் ஓடிடுமே நந்தம்
உமையவள் பாதந் தானினைத்தால் (50)

ஓடிடு மென்று மொழிந்தீரையா அதில்
ஒன்றும் ஒளியாமல் உரையுமையா
தேவலைபானது யாருக்கையா கொஞ்சம்
தெரியச் சொல்லவே வேணுமையா (51)

ஆயக்காரன்புலம் கங்காதரம் பிள்ளை
அருமையாய்ப் பெற்று வளர்த்த பெண்ணை
பேய்கள் பிடிக்துக் கொண்டாடிவே பெரும்
மந்திரவாதிகள் தான் பார்த்தார் (52)

மந்திரம் பார்த்ததாச் சொன்னீரையா பேயை
மாரணம் செய்ததை விலக்கினரா
தொந்திர வில்லாமல் செய்தார்களா அதைச்
சொல்லுவீர் நன்றாய் விபரமுடன் (53)

சங்கிலி மாடன் எனவுரைத்தார் பொல்லா
சங்கடம் என்றால் முடியா தென்றார்
அங்கா ளம்மையாலே தான்விலகு மிது
யாராலு மாகாதென வுரைத்தார் (54)

அந்த மொழிகேட்ட கங்காதரம் பிள்ளை
அப்போதே அம்மையைத் தானினைந்து
சிந்தையி லெண்ணி விபூதி கொடுக்கவும்
சீக்கிரம் மாடன் விலகினதாம் (55)

தீராத வினையையுந் தீர்த்துவைத்தா ளெங்கள்
தேவி அங்காளம்மை தான் பார்த்து
மாறாத சங்கிலி மாடனுமேமனம்
நடுங்கி ஓடிப் பறந்ததடி (56)

அம்மை சன்னதிக்கு வந்தார்களா அவர்
அன்புடன் பூஜை புரிந்தார்கள்
தின்மை விலக்கிய செம்படவன் காட்டு
அம்மைக்கு என்ன நயம் புரிந்தார் (57)

பூஜை முகத்திலே வந்தாரடி பெண்ணே
பொங்கலிட்டுச் சேவல் தானறுத்து
ஆசையாய் மாவின் விளக்கேற்றி நன்றாய்
அபிஷேகம் செய்தாரடி மயிலே (58)

அபிஷேகம் ஆராதனை செய்து பின்பு
அர்ச்சனை செய்து முடித்தவுடன்
நைவேதனத்துடன் தேங்கா யுடைத்துமே
நேர்த்தியாய்க் கற்பூரம் தான் கொளுத்தி (59)

விபூதிப் பிரசாதம் தந்தனரே பெண்காள்
விரும்பியே நாமுமே பெற்றிடுவோம்
தவமிருந்தாலுங் கிட்டாதடி அம்மை
தாமரை பொற்பாதம் காப்பாமே (60)

நம்பு மடியார் துயர் தீர்க்குமிந்த
செம்படவன் காட்டெல்லையிலே
அம்பிகை அங்காளம்மை கோவில் கும்பா
அபிஷேக மகத்துவம் சொல்லுமையா (61)

எத்தனை ஜனங்கள் கூட்டமடி தெரு
எங்கெங்குங் கடை வீதியடி
பக்தர்கள் போற்றிப் பணிவதையும் நல்ல
பாடகசாலையும் பார் மயிலே (62)

கடையுங் கடைத்தெரு வீதிகளும் நாளும்
காணரி தான புதுமைகளும்
திக தரி கிட மேளவாத்தியத்
தீங்குழ லொலியைக் கேளுங்கடி (63)

பஜனை கோஷ்டியைப் பாருங்கடி செய்த
பாவமெல்லாம் பறந்தோடு மடி அந்த
பஜனை கீர்த்தனை தான்கேட்டால் பர
லோகம் வாழலாம் பெண் மயிலே (64)

ஆகாச மத்தாப்பு அவிட்டுடனே நல்ல
அழகான சக்கரம் கொம்புடனே
வேணபடி பெட்டி பாம்பு வாணங்களின்
வேடிக்கை பார்க்கலாம் பெண் மயிலே (65)

இன்னு மனேக வேடிக்கையா மிதை
எடுத்துரைக்கவே முடியாதையா
கண்ணாலே பார்த்துக் களித்திடுவீர் எங்கும்
காணக் கிடைக்காத் புதுமையையா (66)

உலக மெல்லாம் புகழ்ந்திடவே இந்த
உத்தமி கோவிலைக் கட்டி வைத்தோர்
சகல பேரையும் தானழைத்து நல்ல
தருமம் செய்ததைச் சொல்லுமையா (67)

கிராமத்தி லுள்ளோர் யாவரையுங் கூட்டி
கௌரவமாகவே தானழைத்து
பிராமண போசனம் செய்துவைத்துப்
பெரியோர்களுக் கன்னந் தானளித்தார் (68)

அன்னதானமும் செய்து வைத்தாரவர்
அண்ணன் தம்பி ஐந்து பேர்களையும்
என்றுஞ் சிரஞ்சீவி யாக வாழவே
வத்திப் போற்றி அடி மயிலே (69)

ஐவர்களென்று மொழிந்தீரையா அவர்
அண்ணன் தம்பி பெயர் சொல்லுமையா
வையக மெங்கும் விளங்கும்படி பெயர்
வாழ்த்தியே கும்மி அடிப்போமையா (70)

வேலுத் தேவர் தலைமையடி மற்ற
நாலும் பேரும் இளமை யடி
சேல் விழியாளே சொல்லுவேன் கேளடி
தெரிந்து கொள்ளுவாய் என் கண்மணியே (71)

தெரிந்து கொள்ளவே வேலு மென்றீர்
ஜெயம் பொருந்தி ஐவர்கள் வாழும்படி
வருந்தி ஈஸ்வரி பாதத்தை போற்றியே
வாழ்த்திக் கும்மி அடிப்போமையா (72)

நாராயண தேவர் நடேசத் தேவராம்
நங்கையே கதிரேச தேவருடன்
பாராயடி பெண்ணே சுந்தரேசத் தேவர்
பங்காளி நன்றாகத் தெரிந்து கொள்வாய் (73)

பங்காளி கோவிந்த தேவரோடை வரும்
அங்காளம்மை கோவில் கட்டினதால்
எங்கும் புகழ்ந்திட ஈசனருள் பெற்று
எப்போதும் க்ஷேமமாய் வாழ்வாரடி (74)

கூடியமட்டும் தருமம் செய்து அம்மை
கோவிலைக் கட்டினோர் வம்சமுமே
நீடூழி காலமாய் வாழ வேண்டுமென்று
நேர்ந்து கும்மி அடி மயிலே (75)

நறுமணங் கமழ் மூத்துப்பேட்டை நாணு
பொன்னுச்சாமி பிள்ளை பொற் கமலம்
திருமலாடித் தாள்போற்றிக் கும்மி
செப்பினேன் பாரடி பெண் மயிலே (76)

கற்றமிழாய்ந்த முதிபதியில் வாழும்
இராமச்சந்திர ஐயரடி
பொற்பாதந் தனைத்தான் துதித்து நன்றாய்
போற்றியே கும்மி அடி மயிலே (77)

கங்கை யணிந்த சடைமுடி யோனுக்கு
கண்ணைக் கொடுத்த நற கோத்திரத்தான்
மங்கை சுந்தர நாயகியாள் பாலன்
மருதமுத்து மன மகிழ்ந்து (78)

அங்காளம்மை பேரில் கும்மி தமிழ்ப்பாடி
அன்புடன் கற்றோரடி வணங்கி
மங்களம் பாடியே வாழ்த்திடவே மற்ற
யாவரும் போற்றிப் புகழ்ந்திடவே (79)

முத்து மாநகரில் வாழ்ந்திருக்கும் மருத
முத்து அங்காளம்மையைப் புகழ்ந்து
சித்திரமாகவே கும்மி தமிழ்ப்பாட
தேசப்புலவர் பிழை பொறுப்பீர் (80)

ஒத்திகை பார்த்துமே உத்திரவு கேட்டு
சத்தி உன்சன்னதி முன்னே நின்று
பக்தியுடனே படித்திடவும் பரா
சத்தி உத்திரவு தான்தரவே (81)

அம்மன் பாதத்திலிருந்துடு மாறத்தை
அங்குள்ள பூசாரி தான் தரவும்
சும்மா யிருந்தவர் யாவர்களும் புஷ்பம்
சோன மாரிபோல் பொழிந்தார்கள் (82)

கோவிலை கட்டினோர் முழுவதுமே அம்மை
கும்மியை பார்த்து மிக மகழ்ந்து
பூவிலொரு மாலை செய்து கழுத்தினில்
போட்டு வெகுமதி செய்தனர் பார் (83)

கொறநாடு கொத்தனூர் ரெத்தினம் பிள்ளையாம்
கோவில் வேலை செய்த மேஸ்திரியார்
கறந்தனில் வெள்ளிப் பணம் கொடுத்து
கழுத்தினில் பூமாலை போட்டனர் பார் (84)

செம்படவன் காட்டில் அங்காளம்மை பேரில்
செந்தமிழ்க் கும்மி தனைப்பாட
அன்புடன் கேட்போர் படித்தோருவப்போர்
யாவரும் க்ஷேமமாய் வாழ்ந்திடுவார் (85)

முற்றிற்று.

உ

சிவமயம்.

[வண்ணத் தினைமாவை என்ற சீர்]

தேடக் கிடைக்காது தங்கமே செம்ப
டவன்காட்டில் வாழும் தெய்வமே இதோ
தேடித் தரிசனம் செய்துமே அம்மன்
திருப்பாதமே கதியாகவே
ஒருபோதுமே மறவாமலே
தரிசித்திடுவோம் இந்த நேரமே முன்
சன்மவினைகள் பறந்தோடுமே
சர்வ தேவதைகளும் காவலாய் பரா
சத்தி அங்காளம்மைக்கோ வலாய் வந்து
தங்குமிட மிதோ பார வலாய் (க)

சகலபிணிகள் தீரும் கவலை இல்லாமல் பாரும்
சந்ததி யுண்டாகும் தங்கமே வந்து
சரணம் செய்குவா யிந்த நேரமே
கோடி தவ மிருந்தாலுமே அம்மன்
கோவில் அழகை வந்து பாருமே
கொடும் பாவமெல்லாம் பறந்தோடுமே
நான்கூறும் மொழி கேளும் வினை
தீரும் எனையாளும் உமை
கும்ப தெரிசனம் பாருமே வந்து
செம்படவன் காட்டில் நாளுமே (உ)

அங்காளம்மன் என்ற சத்தமே சொல்லி
யாவரும் கூறுவார் நித்தமே வந்து
அடித்தவர்க்கு பிணி சுத்தமே தினம்
அத்தன் இப்பாகமது
பெற்ற பரா சத்தி உனை
அண்டி வந்தேன் மருதமுத்துமே எனை
ஆதரிப்பாய் மனம் வைத்துமே (ந)

[அல்லி அல்லி நீர் குடிக்கும் என்ற சீர்]

செம்படவன் காட்டி வளரங்காளம்மன் பாதமே
தேடித் தெரிசிப்போமே அடி அன்னமே
சென்ம வினைகள் போகுமே
செம் பொன்னடியை நம்பு மடியார்
துன்பம் விலகி இன்பம் பெறுக (க)

அங்காளம்மன் அங்காளம்மன் என்று தினந்தேடியே
அடிபணிவார்கள் கோடியே அடி அன்னமே
அன்பாய் வெகு பேர் பாடியே
அருள் பெருகவே திருவருள் புரி
பொருள் பெருகவும் ஒருவரம் அருள் (உ)

ஆடாத பேய்களெல்லா மாடி பறந்தோடவே
அங்காளம்மனை நாடவே அடி அன்னமே
உங்கள் வினைக ளோடவே
அம்மனடியைப் பணிவாய் நொடியே
ஜென்ம வினைகள் தீருமினிமேல் (௩)

தீராத வினைகளெல்லாம் தீர்க்கும் பராசக்தியே
தினமுந்துதிக்க முத்தியே அடி அன்னமே
மனதில் நினைக்க சித்தியே
திருவடி தொழுதடி பணிந்துமே
வருவேன் நிதமும் மருத முத்துமே (௪)

வெள்ளிமலை யொத்த பலமேடை.

1. நச்சரவம் பூண்ட சிவன் மாதே............உனை
நம்பினேன் எனக்கு நீ இப்போதே.......அம்மா
நற்றமிழ் படிக்க வரம்
சித்தம் வைத்தருள் புரியாய்........,நாடி வினைபாடி

2. உன்னையன்றி வேறு தெய்வமேது..........இந்த
உலகில் எனக்கு நீ இப்போது.............அம்மா
ஒரு குறைவு மில்லாமல்
தருவா யெனக்கு வரம்....உமையே அங்காளமையே

3. செம்படவன் காடுதனில் வாழும்...............தேவி
அங்காளம்மை பாதமே யென்.............நாளும்
சித்தமதிலே நினைத்து
பத்தியுடனே பணிந்து.......சிறுவன் தேடிவருவன்

4. அங்காளம்மை அங்காளம்மை என்று........வந்து
அடுத்தேன் உன் தலமீதில்.................சென்று
உனை அனுதினமு நினைத்து வருவேன்
மருதமுத்து அம்மா...........அங்காளம்மா.

முற்றிற்று.